

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர், பைபாஸ் சாலையில் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன், தாட்கோ தலைவர் இளையராஜா, தாட்கோ முன்னாள் தலைவர் உமதிவாணன், திருவாரூர் நகர மன்ற தலைவர் புவனப் பிரியா செந்தில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பி. கல்யாணம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர், பைபாஸ் சாலையில் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன், தாட்கோ தலைவர் இளையராஜா, தாட்கோ முன்னாள் தலைவர் உ. மதிவாணன், திருவாரூர் நகர மன்ற தலைவர் திருமதி புவனப் பிரியா செந்தில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பி. கல்யாணம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# கலைஞர் கோட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கலைஞர் கோட்டத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். இந்நிகழ்வின்போது நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி எ.கே.எஸ். விஜயன். சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் இளையராஜா, தாட்கோ முன்னாள் தலைவர் உ.மதிவாணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர் மாவட்டம், காட்டூர், கலைஞர் கோட்டத்தில் உள்ள கலைஞர் அருங்காட்சியகம், முத்துவேலர் நூலகம், கலைஞரின் கலைபாதை ஒலியும் ஒளியும், கலைஞரின் அரசியல் பாதை ஒலியும் ஒளியும் போன்றவற்றை பார்வையிட்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர் மாவட்டம், காட்டூர், கலைஞர் கோட்டத்தில் உள்ள கலைஞர் அருங்காட்சியகம், முத்துவேலர் நூலகம், கலைஞரின் கலைபாதை ஒலியும் ஒளியும், கலைஞரின் அரசியல் பாதை ஒலியும் ஒளியும் போன்றவற்றை பார்வையிட்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) திருவாரூர் மாவட்டம், காட்டூர், கலைஞர் கோட்டத்தில் உள்ள கலைஞர் அருங்காட்சியகம், முத்துவேலர் நூலகம், கலைஞரின் கலைபாதை ஒலியும் ஒளியும், கலைஞரின் அரசியல் பாதை ஒலியும் ஒளியும் போன்றவற்றை பார்வையிட்டார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில்

## அமைச்சர் அர.சக்கரபாணி இல்லத் திருமண வரவேற்பு விழா!

### சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெறுகிறது!



சென்னை, ஜூலை 11-

ஒட்டன் சத்திரம், கள்ளி மந்தையம் கிராமம் காளியப்ப கவுண்டன்பட்டி நினைவில் வாழும் ஆர்.ரங்கசாமி - ஆறுமுகத்தம்மாள் ஆகியோரது மகன் வழிப்பேத்தியும், திண்டுக்கல் கன்னிவாடி நினைவில் வாழும் கே.நல்லையா -சரோஜா ஆகியோரது மகள் வழிப் பேத்தியும், திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி - எஸ்.ராஜலட்சுமி ஆகியோரது புதல்வியுமான எஸ்.தீப்தாவுக்கும், காங்கயம், காடையூர் நினைவில் வாழும் பி.துரைச்சாமி - தெய்வாத்தாள் ஆகியோரது மகன் வழி பேரனும், காங்கயம் அகிலாண்டபுரம் நினைவில் வாழும் சின்னசாமி - வள்ளியாத்தாள் ஆகியோரது மகள் வழி பேரனும், டி.ஈஸ்வர மூர்த்தி - இ.விஜயலதா ஆகியோரது புதல்வருமான இ.சிவபிரதீப்க்கும் திருமண வரவேற்பு விழா இன்று (11.7.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில் சென்னை திருவான்மியூர் இராமச்சந்திரா கன்வென்சன் ஹாலில் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பு விழாவிற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை வகித்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

இம்மண விழா வரவேற்பில் தலைமைக் கழக நிர்வாகிகள், அமைச்சர் ஐ. பெரியசாமி உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற இந்நாள் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள், கழக முன்னணியினர், தோழமைக் கட்சியினர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

## என்.சங்கர் - ச.லட்சுமி சங்கர் இல்ல சுயமரியாதை திருமணம்!

### அமைச்சர் எ.வ.வேலு தலைமையேற்று நடத்தி வைக்கிறார்!



திருவண்ணாமலை, ஜூலை. 11-

திராவிடத்தின் திருமகன், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் என்.சங்கர், வெம்பாக்கம் மேனாள் ஒன்றியக் குழுத் தலைவர் ச.லட்சுமி சங்கர் ஆகியோரின் புதல்வர் மருத்துவர் எஸ்.கௌதமன் மருத்துவர் சி.யுவஸ்ரீ ஆகியோர் சுயமரியாதை திருமணம் 14.07.2025, திங்கள் கிழமை காலை 9:00 மணியளவில், காஞ்சிபுரம், செவிலிமேட்டில் அமைந்துள்ள சுகுமாரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், கழக உயர் நிலை செயல் திட்டக் குழு உறுப்பினரும், தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சருமான எ.வ.வேலு தலைமை ஏற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ஆரணி பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தரணிவேந்தன் தலைமை வகிக்கிறார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் கழக மருத்துவர் அணி துணை தலைவர் மருத்துவர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஓ.ஜோதி வரவேற்புரை ஆற்றுகிறார்.

மேலும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் மருத்துவர் எம்.கே.கார்த்திகேயன் நன்றி கூறுகிறார்.